தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு உ௰௬	மலர்
சஅ	ஆனந்த, மாசி (1975 — பிப்ரவரி — மார்ச்சு)	கக

தனித் தமிழ்

ந. மு. கோவிந்தராய நாட்டார், பி. ஏ. எல். டி.

இஞ்ஞான்று புலமைமிக்கோர் பலர் பிறமொழி கலவாத தூய தமிழில் நூல்களும் கட்டுரைகளும் எழுதி வருகின்றனர். இது வரவேற்கத்தக்கதே தமிழ்க் கன்னி என்றும் இளமை குன்ருதிருப்பதற்கு இதுவே தக்க வழியாகும். எனினும் இத் தமிழ் நடை என்று தொடங்கியது; இதற்கு வழிகோலியவர் யாவர், முதலிய செய்திகள் இற்றை நாள் புலவர் பலருக்குத் தெரிந்திராவாகலின் இக்கட்டுரை எழுதப் பெறுகின்றது. இதற்குத் தொடர்புள்ள வேறு சில செய்திகளும் இதன்கண் விளக்கப் பெறும். முதற்கண் இவற்றிற்குத் தோற்றுவாயாக தொல்காப்பியத்தினை ஆராய்வாம்.

தொல்காப்பியனூர் சொல்லதிகார எச்சவியலில் செய்யுள் இயற்றுவதற்குரிய சொற்கள், இயற்சொல் திரிசொல், திசைச் சொல், வட சொல்லென விளக்கிப் போந்தார். 'வடசொற் கிளவி வடவெழுத்தொரீஇ எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே' என்ற நூற்பாவிற்கும் புறநடை நூற்பாவிற்கும் உரையாசிரியர் பலரும் எழுதியுள்ள உரை விளக்கங்களால் ஆய்வோமாயின் இன்று நாம் எழுதிவரும் தூய தமிழ்நடை மிகக் குறுகிய நோக்கமுடையது போலத் தோன்றுகிறது. மிகப் பழங் காலத்தே தமிழகம் மேற்றிசைக் கண்ணுள்ள எகிப்து, கிரேக்க நாடு, உரோமாபுரி முதலிய நாடுகளுடன் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தமையால் அவ்வந்நாட்டின் சொற்களிற் சில பழந்தமிழிற் புகுந்தன. ஓரை என்ற சொல் தொல்காப்பியத்திலும் யவனர் என்ற சொல் சங்க நூற்களி

லும் பயின்றுள்ளன. சீனம், சாவகம் போன்ற நாட்டின் பெயர்கள் இடைக்காலத் தமிழ் நூற்களில் இடம்பெற்றன. யவனர் என்ற சொல் அயோனியன் என்ற கிரேக்கச் சொல்லின் திரிபு. ஓரை என்ற சொல் ஹோரா என்ற கிரேக்கச் சொல்லின் திரிபு இதுவே பின்னர் ஆங்கிலத்தில் அவர் (Hour) எனத் திரிந்தது இவ்வாறே இன்று நாம். இங்கிலீஷ், பிரஞ்சு, ஹீப்ரு, கிரீக், இஸ்லாம் போன்ற சொற்களை ஆங்கிலம், பிரஞ்சு, எபிரேயம், கிரேக்கம், இசுலாம் எனத் திரித்து எழுதி வருகின்றோம். பாதிரியார் என்ற சொல் தந்தை என்னும் பொருளுள்ள Padre (பட்ரே) என்னும் இலத்தின் சொல்லின் திரிபு சிவன் என்னும சொல் சங்க நூற்களில் காணப்படாவிடினும் அது தமிழ்ச் சொல்லே என காரந்தை மணி விழா மலரில் வந்துள்ள "சைவமும் நான் மறையும்" என்ற கட்டுரையில் விளக்கப் பெற்றுள்ளது.

'வடசொற்கிளவி' என்ற நூற்பாவின் பொருளைப் பின் பற்றியே. சங்க நூற்கள், திருக்குறள், ஐம்பெருங்காப்பியங்கள் ஆகியவும், பின்னர் வந்த கம்பராமாயணம், திருத்தொண்டர் புராணம், சைவ வைணவத் திருமுறைகள் ஆகியவும் வடசொற்களைத் தமிழ் முறைப்படி திரித்து எழுதிவரலாயின. அனுமன், சானகி, அட்டாங்கம், உருத்திராக்கம் அக்குமணி, தீக்கை, சலம், சனம் பங்கயம், சோதி முதலிய சொற்களை நோக்குக. ஹ, ஷ, ஸ, ஜ, க்ஷ ஆகிய வடவெழுத்தொலிகள் இவ்வாறு திரிக்கப்பெற்றன. இவை ஒருபுடை நிற்க திருமறைக்காடு, திருமுதுகுன்றம் போன்ற தமிழ்ப் பெயர்களை, வேதாரண்யம், விருத்தாசலம் போன்ற பெயர்கள் கவர்ந்து கொண்டன. இவ்வாறே, பெருவுடையார்கோயில் பிரகதீஸ்வரர் கோயிலாயிற்று, பெரியநாயகி, பிருகந்நாயகி ஆயிற்று, ஐயாறு பஞ்சநதம் ஆயிற்று. திருஞானசம்பந்தரால், 'அங்கயற்கண்ணி' என்று அழைக்கப் பெற்ற அருந்தமிழ்த் தொடர் மீனுக்ஷி ஆயிற்று. இதனில் மீன் என்ற சொல் தமிழே

தொல்காப்பியப்பாயிரத்தில் பயின்றுள்ள 'வழக்கும் செய்யுளும்' என்ற சொற்களும், அகத்தியனுரைப் பற்றி கம்பன் காப்பியத்தில் பயின்றுள்ள.

உழக்குமறை நாவினும் உயர்ந்து உலகமோதும்
வழக்கினும் மதிக்கவியினும் மரபின்நாடி' ஆகிய

சொற்களும், 'வழக்கெனப்படுவதுயர்ந்தோர்மேற்றே' என்ற தொல்காப்பிய மரபியல் விதியினுல் உயர்ந்தோர் வழக்

கிளையே குறிக்கின்றன என்பது போதருகின்றது. இங்ஙன மாயின் அக்காலத்து உயர்ந்தோர் அல்லாதார் வழக்கில் பயின்ற சொற்கள், எத்துணையோ? எத்தகையவோ? யாவர் அறிதல் கூடும்? ஆராய்வாம்.

நெடுங்காலம் எழுத்தின்றி இருந்த (எழுதா மறை) வட மொழி, தமிழ் நெடுங் கணக்கின் மரபைப் பின்பற்றித் தன் நெடுங் கணக்கை அமைத்துக்கொண்டது. தமிழ் நெடுங்கணக் கினின்று சில எழுத்துக்களையும் எடுத்துக்கொண்டது. ள, என்ற எழுத்தை மிக அண்மையிற்றான் எடுத்துக்கொண்டது. இவ் வெழுத்து டாக்டர் பண்டார்க்கர் வடமொழி நெடுங்கணக்கிற் காணப்படவில்லை. தென்னாட்டுப் பார்ப்பனர் வடமொழி நெடுங் கணக்கிற் காணப்படுகின்றது.

'மொகஞ்சதாரோ புதிரின் விளக்கம்' (Light on the Mohenjadaro Riddle) என்ற நூலில் அதன் ஆசிரியர் H. ஈராசு பாதிரியார் (Rev. H. Heras) கீழ்வருமாறு எழுதியுள்ளார்:—

"Being Dravidians, the inhabitants of Mohenjadaro in northern India naturally spoke a Dravidian language in which the earliest proportion of words are found in Tamil. This confirms the common belief that Tamil is the oldest of the present languages."

இதன் பொருள்:

வடவிந்தியாவில் வாழ்ந்த மொகஞ்சதாரோ மக்கள் திரா விடர்களாதலின் அவர்கள் பேசிய மொழியும் திராவிடமே இம்மொழியில் பயின்றுள்ள மிகப் பழங்காலச் சொற்கள் தமி ழில் காணப்படுகின்றன ஆகலின் இது, தமிழ்தான் இன்றைய மொழிகளிலெல்லாம் பழமையானது என்று பலரால் நம்பப்படு கின்ற கொள்கைக்கு அரண் செய்கின்றது.

'புத்தர்கால இந்தியா' (Buddhist India) என்ற நூலில் அதன் ஆசிரியர், T. W. ரைசு டேவிட்சு, (T. W Rhys Davids) என்னும் அறிஞர் கீழ்வருமாறு எழுதியுள்ளார்:—

"our Vedic sanskrit is largely subject to Dravidian influence both in phonetics and in vocabulary."

இதன் பொருள்:— நம்முடைய வேத சமக்கிருதம் அதன் ஒலி முறையிலும், சொல்லாக்கத்திலும் திராவிட மொழியால் மிகவும் பாதிக்கப்பெற்றுள்ளது.

வங்காளமொழியின் தோற்றமும் வளர்ச்சியும் (The origin and Development of Bengali) என்ற நூலில் அதன் ஆசிரியர் S. K. சாட்டர்ஜி (S. K. Chatterji) கீழ்வருமாறு எழுதியுள்ளார்:

"The language of the Rig Veda is yet purely Aryan in its form But its phonetis is already affected by Dravidian and it has aeready begun to borrow words from Dravidian Among words of Dravidian origin the following may be noted Anu, Arani Kavi, Karmara, Kala, Kunda, Gana, Nana, Nila, Pushpa, Puja, Pala, Piju, Mayura, Ratri, Rupa "

இதன் பொருள் :—

இருக்கு வேதத்தின் மொழி நடை இன்னமும் ஆரியமொழி யமைப்பாகவே இருக்கின்றது. எனினும் அதன் ஒலியமைப்பு திராவிடத்தால் பாதிக்கப்பெற்றுள்ளது திராவிடத்திலிருந்து சொற்களை கடன் வாங்கவும் தொடங்கியுள்ளது அவற்றில் சில கீழ் வருமாறு :— அணு, அரணி (தீக்கடைக்கோல்) கவி (குரங்கு) கருமாரா (கம்மாளர்) காலா (காலம்), குண்டா (குண்டு, குழி) கணு (கணம், கூட்டம்) நாணு. (பலவித) நீலா. (நீலம்) புஷ்பா (பூ). பூஜா (பூசை) பலா (பழம்) பீஜா (பீசம், விதை) மயூரா (மயில்) ராத்ரி (இரவு) ரூபா, (உருவம்)

டாக்டர் R. G. பண்டார்க்கர் (R G Bhandarkar), டார்கடர் கிரியர்சன் (Dr. Grierson) போன்ற அறிஞர்களும் இவ்வாறே எழுதியுள்ளனர். மேற்காட்டப்பெற்ற சொற்கள் எல்லாம் தமிழ்ச் சொற்கள் என்பது தெளிவாம். சில சொற்களே காட் டப்பெற்றிருப்பதால் காட்டப் பெருத சொற்கள் எவ்வளவோ? இன்று வழக்கில் உள்ள மொழிகளில் தமிழே முன்னர்த் தோன்றியதென ஐயத்திற்கிடனின்றி நிறுவப் பெறறிருப்பதனு லும், கன்னடம், தெலுங்கு, மலையாளம் முதலியவை தமிழி னின்று பின்னர்த் தோன்றியவை என பெறப்படுதலானும், மேற்காட்டப்பெற்ற மேற்கோள்களில் திராவிடம் என்ற சொல் வருமிடத்தெல்லாம் தமிழ் என்று கோடலே பொருத்தம் உடையப தாம் மேலே காட்டப்பெற்ற சொற்களெல்லாம், தமிழிலிருந்து இருக்கு வேதத்திற் கொள்ளப்பெற்று பின்னர் தமிழிடம் திரும் பின வெனத் தெளியலாம்

நம் சிவன் கோயில்களில் வழிபாடு நடத்திவைப்போரை குருக்கள் என்றும், வைணவக் கோயில்களில் வழிபாடு நடத்தி வைப்போரை பட்டாச்சாரியார் என்றும், ஊர்த்தேவதைகளுக்கு

வழிபாடு நடத்திவைப்போரை பூசாரிகள் என்றும் அழைக்கின்றோம். ஆனால் பம்பாய், கல்கத்தா முதலிய வடநாட்டு நகரங்களில் உள்ள கோயில்களில் வழிபாடு நடத்திவைப்போருக்கு இன்றும் பூசாரி என்ற சொல்லே வழங்கி வருகின்றது. நம் வீட்டுச் சடங்குகள், திதிகள் முதலியவற்றில் பூசை நடத்தி வைக்கும் புரோகிதர்,

' நாநுவித பத்ர புஷ்பம் சமர்ப்பியாமி, கதலிபலம் சமர்ப்பியாமி '' என மந்திரம் ஓதும்போது இச்சொற்களெல்லாம் சமக்கிருதம் என இதுகாறும் நினைத்திருந்தோம். ஆனால் இதில் வந்துள்ள, நாநு, புஷ்பம், கதலிபலம் ஆகிய சொற்கள் தமிழிலிருந்து இருக்கு வேதத்திற்குச் சென்றவை என இது போது அறிகின்றோம்.

அமெரிக்க புதைபொருள் ஆராய்ச்சியாளர் 10000 ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்காவில் உள்ள கொலரடோ ஆற்றங்கரையில் ஒரு சிவன் கோயில் இருந்திருக்க வேண்டுமென்று கூறியிருப்பதாலும், சர்ஜான் மார்ஷல் சைவ சமயமே உலகின் மூதல் தோன்றிய சமயமென்றும், மத்தியதரைக்கடற் பகுதியிலுள்ள மக்கள் திராவிட மொழியே பேசியிருக்கக் கூடுமென்றும், கூறியிருப்பதாலும், ஈராசு பாதிரியார் தமிழே இப்பொழுதுள்ள மொழிகளில் பழமையானது என்று கூறியிருப்பதாலும் கி. மு. 500—400-ல் வாழ்ந்த கிரேக்க சரித்திர ஆசிரியர், ஏரடோட்டஸ் என்பார், மத்தியதரைக் கடலில் உள்ள கிரீட் தீவில் சிவன் என்னும் பெயருள்ள ஒரு நகரம் இருந்ததென்றும், அங்கு வாழ்ந்த மக்கள் பேசிய மொழிக்குப் பெயர் தமிழி என்றும் கூறியிருப்பதாலும், சர்ஜான் மார்ஷல், ஈராசு பாதிரியார், R. K. முக்கர்ஜி, R. C தத்தர், பெட்ரிக்கார்ட்டன், L. N. தீக்ஷிதர், K. இராமகிருட்டினையா முதலியோர் ஆரியர் இந்நாட்டின்மீது படையெடுத்து வந்தபோது இந்தியாமுழுதும், மொகஞ்சதாரோ மக்கள் வழியினரே வாழ்ந்து வந்தனர் என்று கூறியிருப்பதாலும் ஒரு காலத்தில் தமிழ் மொழியும், சைவ சமயமும் உலகெங்கணும் பரவி இருந்தனவென்பது பெறப்படும்.

இம்மக்கள் பேசிவந்த தமிழ் இன்று நாம் பேசிவரும் தமிழிற்கு மூலம் என்றே கொள்ளவேண்டும். அது இன்றைய மொழ்கருமாறு பட்டிருந்திருத்தல் இயல்பேயாம். இருக்கு வேதம் சிந்து நதிதீரத்தில் ஏற்பட்டதாகலின் மொகஞ்சதாரோ மக்கள் வழியினர் பேசிய தமிழ் மொழியிலிருந்தே அது சொற்களையும் அவற்றின் ஒலி மரபுகளையும் எடுத்துக் கொண்டிருக்க

வேண்டும். மொகஞ்சதாரோமக்கள் மந்திரம், யோகம் ஆகிய கலைகளை அறிந்திருந்தனர் என்றும். அவர்கள் மறு பிறப்பில் நம்பிக்கை கொண்டிருந்திருக்க வேண்டுமென்றும் சில ஆராய்ச்சியாளர் கருத்துத் தெரிவித்திருக்கின்றனர். இப் பழங் காலத் தமிழ் மக்களும், தமிழ் நாட்டின் தென்பகுதியில் கடலில் ஆழ்ந்த தமிழ்ப் பகுதியில் வாழ்ந்த தமிழ் மக்களும் ஏறக்குறைய ஒரே விதமான மொழியே பேசியிருந்திருக்கவேண்டும் இதனாலேயே

> ஏரணம் உருவம்யோகம் இசைகணக்கிரதம் சாலம்
> தாரணம் மறமே சந்தம் தம்பம் நீர்நிலம் யோகம்
> மாரணம் பொருள் என்றின்ன மானநூல் யாவும்வாரி
> வாரணம் கொண்டதந்தோ வழி வழிப்பெயரும்மாள

என்ற பாடல் எழுந்தது போலும்.

தொல்காப்பியர் காலத்தில் தமிழகம் வடவேங்கடம் தென்குமரியாக மிகக் குறுகிவிட்டபடியால் இவரது நூல் மேற்கூறிய தமிழ் மொழிக்கும் இலக்கணம் கூறியதன்று எனவுணர்க தமிழ் நெடுங் கணக்கின் முறையைப் பின்பற்றி வடமொழி நெடுங் கணக்கு அமைக்கப்பெற்றதென முன்பு கண்டோம். மேற் காட்டிய மேற்கோள்களிலிருந்து இருக்கு வேதம் அக்காலத் தமிழிலிருந்து சொற்களை எடுத்துக் கொண்டது மாத்திரமன்றி அதன் ஒலி மரபினையும் பின்பற்றியதெனவும் உணர்ந்தோம். ஆகலினன்றே தொல்காப்பியர் பிறப்பியல் புற நடை நூற்பாவின்கண் 'பார்ப்பாரது வேதத்தில் எழுத்துருப்பெறாத வெறும் காற்றிற்கும் அளவு கூறப்பெற்றுள்ளது. யாம் அதனை ஈண்டு விளக்காது எழுத்துருப் பெறுகின்ற எழுத்துக்களுக்கெல்லாம் காற்றின் அளவு கூறிப்போந்தோம்' என வடமொழி எழுத்துக்களையும் உள்ளடக்கி ஒலியிலக்கணம் கூறினார் என அறிக

1920–22 ஆண்டுகளில் ' திருச்சியில் தமிழ் மாணவர் கழகம் ஒன்று தோன்றி நடைபெற்று வந்தது. இக்கழகத்தின் தலைவர் காலஞ்சென்ற பேரறிஞர் பா. வே மாணிக்க நாயக்கர் அவர்கள் கழகத்தின் தொடக்க விழா, திருச்சி - தூய யூசேப்புக் கலலூரியின் லாலி (Lawly) கூடத்தில் நடைபெற்றது. தலைமை தாங்கி சொற்பொழிவாற்ற (Lecture from the chair)) காலஞ்சென்ற பேராசிரியர். ச. சோமசுந்தர பாரதியார் அவர்கள் வரவழைக்கப் பெற்றிருந்தார். பாரதியார் தமிழைப் பற்றி ஆங்கிலத்தில் உரையாற்றினார். ஆங்கில மொழியைப் பின்பற்றி பிறமொழிச் சொற்களையும் சேர்த்துத் தமிழை வளம் படுத்த வேண்டுமென்பது சொற்பொழிவின் சுருங்கிய கருத்து. சொற்

பொழிவு முடிந்தவுடன் நன்றி செலுத்த எழுந்த பா. வே. மாணிக்க நாயக்கர்,

"பாரதியார், தமிழ் நெடுங் கணக்கின் சிறப்பினையும், தொல்காப்பியத்தின் பெருமையினையும் சிறிதேனும் உணர்ந்திருந்தாராயின் இவ்வாறெல்லாம் உளறிக்கொட்டியிருக்க மாட்டார்" எனச் சிறிது நேரம் பேசி நன்றி செலுத்தி அமர்ந்தார். உடனே பாரதியார் எழுந்து, "நண்பர்களே, நான் நாயக்கர் அவர்கள் கருத்துக்கு மாறுபட்ட கருத்துடையவன் என்று நினைக்காதீர்கள்; அவர்கள் கருத்துக்களை நான் முழுதும் ஏற்றுக்கொள்ளுகின்றேன்" என்று 'சாதுரியமாக'ப் பேசி தப்பித்துக் கொண்டார். இக்காலத்திற்றான் திருச்சியில் முதன் முதல் தமிழாசிரியர் கழகம் ஒன்று தோன்றி நடைபெற்று வந்தது. இதற்கும், பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்களே தலைவராயிருந்தார். கழகத்தில் என் தமையனார் ந. மு. வே. அவர்கள், தூய யூசேப்புக் கல்லூரியின் தமிழாசிரியர் அ சிவப்பிரகாசம் பிள்ளை அவர்கள் முதலியோர் உறுப்பினராயிருந்தனர். நாயக்கர் அவர்கள் பேச்சுக்களைக் கேட்டபின் திரு. சிவப்பிரகாசம் பிள்ளை தம் பெயரை 'இறையொளி'ப் பிள்ளை என மாற்றிக் கொண்டார். இன்றைய தனித் தமிழ் நடைக்கு வழிகோலியவர் பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்களே ஆவர்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் முதல் நான்காண்டுகளின் அறிக்கைகள் வட சொற்கள் கலந்த நடையிலேயே அமைந்திருந்தன. நாயக்கர் அவர்களின் தொடர்பு சங்கத்திற்கு ஏற்பட்ட பின்னரே சங்கம் தனித் தமிழ் நடையைப் பின்பற்றலாயிற்று. மறைமலையடிகளார் முதலில் வடசொல் கலந்த நடையே எழுதி வந்தனர். தாம் நடத்திய திங்கள் இதழுக்கு, 'ஞான சாகரம்' என்ற பெயரே வைத்திருந்தார். நாயக்கர் அவர்கள் எழுதிப் போந்த கட்டுரைகளும், தொல்காப்பியத்தைப் பற்றி காலஞ்சென்ற மகா வித்துவான் ரா. ராகவ ஐயங்கார் அவர்களுடன், வினு விடை என்ற முறையில் எழுதிய கடிதப்போக்குவரத்துக்களும் மிகத் தூய தனித் தமிழ் நடையிலேயே அமைந்திருந்தன நாயக்கர் அவர்கள் பாகற்பட்டு மிட்டாதார் ஆவர் எனினும் அவர் குடும்பத்தினர் அனைவரும் தமிழ்ப் புலமை மிக்கவர். இவர் தமையனார் கம்ப ராமாயணத்தில் பெரும்புலமை உடையவர். இவர் தங்கை என் தமையனாருக்கு எழுதிய கடிதம் ஒன்று செய்யுள் நடையிலேயே அமைந்திருந்தது. வாழ்க என்றும் நாயக்கர் அவர்கள் பெயரும் புகழும்.

உலகத் தமிழர்கள் பங்குகொள்ளும் பெருவிழா!
தமிழகத்தின் தலைநகரிலே
தமிழ்ப்பண்பாட்டு இயக்கம் ஏற்பாடு செய்கிறது

டாக்டர் சாலை இளந்திரையன்,
3362 / 1, கிருஸ்டியன் காலனி, நியூ டெல்லி.

உலகெங்கும் வாழும் தமிழர்களின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் தமிழ்ப் பண்பாட்டுப் பெருவிழா ஒன்று 1975 டிசம்பரில் தமிழ் நாட்டிலே நடைபெற இருக்கிறது. விழாவை ஏற்பாடு செய்கிற உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் தலைவர் டாக்டர் சாலை இளந்திரையன் அவர்கள் இதுபற்றி மேலும் தெரிவிப்பதாவது :

1974 சனவரியில் யாழ்ப்பாணத்தில் உருவான உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் இதுவரை பர்மா, சிங்கப்பூர், மலேசியா, இலங்கை. இந்தோனேசியா, இங்கிலாந்து. பிஜி, தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளில் படர்ந்து பரவியுள்ளது. பல நாடுகளில் ஏற்பட்டுள்ள இந்த ஆர்வத்தை வளர்த்துப் பரப்பி, தமிழ் மக்களை எல்லாம், பண்பாட்டு அடிப்படையில் ஒன்று சேர்க்கும் நோக்கத்துடனேயே மேற்படி விழாவை இயக்கம் ஏற்பாடு செய்கிறது, சென்னை நகரத்தில் தொடங்கி சுமார் மூன்று வார காலம். தமிழகத்தின் பல்வேறு நகரங்களில் விழாவை நடத்துவது என்று இயக்கம் திட்டமிட்டுள்ளது

இந்திய அரசின் நிதி அமைச்சர் சி. சுப்பிரமணியம், தமிழக அமைச்சர் க. இராசாராம், பல்கலைச் செல்வர் தெ பொ. மீ, துணைவேந்தர் நெ. து. சுந்தரவடிவேலு அருட்திரு குன்றக்குடி அடிகளார், தொழிலதிபர் நா. மகாலிங்கம், சிந்தனையாளர் ஏ. பி ஜனார்த்தனம், நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. கே ஏ அப்துஸ் சமது, கலைமாமணி எஸ் டி சுந்தரம், தொழில் விற்பன்னர் வி. ஜி பன்னீர்தாஸ் ஆகிய பெருமக்கள் விழாவின் காப்பாளர்களாக இடம் பெற்றுள்ளார்கள்.

விழாவின் அமைப்பு முறை பின்வருமாறு: தமிழே தெரியாத தமிழர்களுக்குத் தமிழ் வகுப்புகள், — தமிழக வரலாறு மற்றும் தமிழ் இலக்கியம் பற்றிய சொற்பொழிவுகள். — தமிழ் இசை, தமிழக நாட்டுப்புறக் கலைகள், தமிழ் நடனம், நாடகம் பற்றிய கருத்தரங்குகள், — இவைகளே பண்பாட்டு விழாவின் முக்கிய நிகழ்ச்சிகள் இவை தவிர, தமிழ்ப் பண்பாட்டுப் பாரம்பரியத்தையும் தமிழ் மக்களின் உலக நாகரிகத் தொடர்புறவையும் விளக்கும் கண்காட்சி ஒன்றும் அமைக்கப்படுகிறது. மாலை நேரங்களில், வெளிநாட்டுத் தமிழர்கள், அங்கங்கே

நடத்தப்படும் கலை நிகழ்ச்சிகளைக் கண்டு களிப்பார்கள். கடைசி ஒரு வாரத்தில், அவர்கள் தமிழகத்தின் முக்கியமான இடங்களை எல்லாம் கண்டு வரவும் அங்கங்கே அவர்களுக்கு வாழ்த்தும் வரவேற்பும் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது

டாக்டர் சாலை இளந்திரையன் அவர்கள் தலைமையில்' பதினாலு இளைய அறிஞர்களைக் கொண்ட விழாக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது உலகம் சுற்றிய தமிழர் சோமலெ செயலாளராகவும், நாடாளுமன்ற உறுப்பினர் வலம்புரி ஜான் துணைச் செயலாளராகவும் பொறுப்பேற்றுள்ளார்கள். டாக்டர் பொன் கோதண்டராமன, பேராசிரியர் க. த திருநாவுக்கரசு ஆகியோர் தமிழ் வகுப்புக்களுக்குத் திட்டம் வகுப்பார்கள். உலகத தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திலும தமிழகத்தின் மூன்று பலகலைக் கழகங்களிலும உள்ள அறிஞர்கள் இந்த வகுப்புக்களை நடத்துவார்கள். பேராசிரியர் க ப. அறவாணன் சொற் பொழிவுகளுக்கும் கருத்தரங்குகளுக்கும் திட்டம் வகுப்பார். தமிழ் நாட்டின் பலதுறை அறிஞர் பெருமக்கள் இதில் பங்கேற் பார்கள். பொறியாளர் கொடுமுடி சண்முகமும் நூலகர் இரா. முத்துக்குமாரசாமியும் கண்காட்சிகளை அமைப்பார்கள். அரசுத் துறையினரும். உ த. ப. இயக்கத்தினரும், தமிழகப் புத்தக வெளியீட்டாளர்களும் இதில் மூக்கிய பங்கு வகிப்பார்கள். டாக்டர் அவ்வை நடராசன், "சிலம்பொலி" சு செல்லப்பன் ஆகியோர் உணவு மற்றும் போக்குவரத்து ஏற்பாடுகளைக் கவனிப்பார்கள் ஆனந்த விகடன் மணியன் கலை நிகழ்ச்சி களுக்குப் பொறுப்பு ஏற்க, உலகத் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் இரா. சனார்த்தனன் சுற்றுலா ஏற்பாடுகளை மேற் கொள்வார் குழந்தைக் கவிஞர் அழ, வள்ளியப்பாவும் எழுத் தாளர் ஜே எம் சாலியும், விழாவை ஒட்டி வெளிவரும் சிறப்பு மலரைத் தயாரிப்பார்கள் பேராசிரியர் பா வளனரசு மேற் கண்ட எல்லாப் பணிகளின் இணைப்பாளராகப் பொறுப்பு ஏற்பார். தமிழகப் பொதுமக்கள் அனைவரும், — தேவையான இடத்தில் தேவையான அளவில். விழாப் பணிகளுக்குத் தோள் கொடுத்துத் துணை நிற்பார்கள்

இந்த விவரங்களைப் பத்திரிகைகளுக்குத் தெரிவித்துள்ள டாக்டர் சாலை இளந்திரையன் அவர்கள், உலகெங்கும் உள்ள அனைத்துத் தமிழர்களும் விழாவுக்குத் தங்கள் முழுமையான ஆதரவைத் தரவேண்டும் என்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொண்டுள்ளார். இயக்கத்தில் சேரவும் விழாவில் பங்கு கொள் ளவும் பொருள் உதவி செய்யவும் விரும்புவோர், இயக்கத்தின் தலைவர் டாக்டர் சாலை இளந்திரையன் (3362/1, கிறிஸ்டியன் காலனி, புது டில்லி - 5) அவர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் ★

பிம்பிசாரக் கதை

டாக்டர் சோ ந. கந்தசாமி, எம். ஏ. எம். லிட்., பிஎச். டி.
தமிழ் விரிவுரையாளர், அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.

வடமொழியில் இடைக்காலத்தில் எழுந்த சாகுந்தலம், இரகுவமிசம், குமாரசம்பவம், நைடதம் முதலிய காவியங்களுக்கு மகாபாரதம், இராமாயணம் ஆகிய இதிகாசங்களில் வரும் கதைக் குறிப்புக்கள் காரணமாய் அமைந்தன அங்ஙனமே தமிழில் பிம்பிசாரக்கதை, குண்டலகேசி முதலிய பௌத்தக் காப்பியங்களுக்கு உரிய மூலப்பொருள் பிடகங்களிலும் அவற்றின் உரைகளிலும் பிற பௌத்த நூல்களிலும் காணப்படுகின்றன. திபெத்திய மொழியில் எழுந்த விநயபிடகம் (Dulva) புத்தர்பிரான் பிறந்த அதே நாளில் மகதத்தின் மன்னன் பிம்பிசாரன், கோசாம்பியின் கோமான் உதயணன், அவநிதி அரசன் பிரச்சோதனன் என்பவர்கள் பிறந்தனர் என இயம்புகிறது. இவர்கள் முறையே அரசியல் தலைவராய் அமைந்ததுடன் பிம்பிசாரக் கதை, பெருங்கதை, ஆகிய தமிழ்க் காப்பியங்களின் தலைவராகவும் திகழ்தல் காணலாம்.

பெருங்கதை, உதயணன் கதை போலவே பிம்பிசாரக் கதை என்பதும் பழம் தமிழ்க் காப்பியங்களில் ஒன்ருய் ஒளிர்ந்தது. இக்காப்பியத்தின் நான்கடிகள் மட்டுமே இன்று கிடைக்கின்றன. நீலகேசிக்கு உரை வகுத்த சமயதிவாகரரும் சிவஞான சித்தியார் பரபக்கத்தின் சௌத்திராந்திகன் மதப் பகுதியை விளக்கும் ஞானப் பிரகாசரும் பிம்பிசாரக் கதையின் ஒரு பகுதியை மேற்கோளாக எடுத்து ஆண்டுள்ளனர். நீலகேசி உரையாசிரியர் 'இவன் பிறக்கின்ற காலத்து மாதாவினது வலமருங்குலால் பிறந்தான்; அவளும் ஆறு நாள் குற்றுயிரோடு கிடந்து ஏழாம் நாள் இறந்தாள். இது புத்தமாதாக்கள் யாவர்க்கும் ஒக்கும் என்னை ?

'உலும்பினி வனத்துள் ஒண்குழைத் தேவி
வலம்படு மருங்குல் வடுநோ யுருமல்
ஆன்ருேன் அவ்வழித் தோன்றினன் ஆதலின்
ஈன்ருேள் ஏழாநாள் இன்னுயிர் வைத்தாள்'

என்றது பிம்பிசாரக் கதை என்னும் காவியம்: பௌத்தருடையது: அதன்கட் கண்டுகொள்க (நீலகேசி பக். 71) என

இயம்புதல் காண்க. இப்பகுதியினையே ஞானப்பிரகாசரும் தத்துவப் பிரகாசரும் சிவஞானசித்தியார் உரையில் மேற்கோளாக எடுத்துரைத்தனர். மேற்கண்ட பிம்பிசாரக் கதைப் பகுதி லலிதவிஸ்தரம் என்ற வைபுல்லிய மகாயான நூலில் கீழ்வருமாறு காணப்படும்:—

"Queen Maya bears the bodhisattva for ten months. This general law applies to all bodhisattvas... When the time comes for her to be delivered, she goes to the Lumbini grove with her companions...... **The bodhisattva is then born from her right side which remains uninjured,** as his body is mind — made"

Vide, 1. Bodhisattva Doctrine p. 298
2. Literary history of Sanskrit Buddhism p. 21

"......Such a bodhisattva's mother dies **seven days after his birth** ...." Vide. Bodhisattva Doctrine p. 298

பிம்பிசாரக் காப்பியப் பகுதியில் காணப்படும் 'வடுநோய் ஆருமல்' என்ற தொடர் நீலகேசி உரையாசிரியரால் ஆளப்பெற்றது எனினும் இத்தொடர் சித்தியார் உரையில் 'வடு நோய் உருமல்' என்றே காணப்பெறுகிறது. இப்பாடமே ஏற்றது என்பதை மேற்காட்டிய லலிதவிஸ்தரத்தின் ஆங்கில மொழிப்பெயர்ப்புப் பகுதியினை உற்று நோக்கி உணரலாம்.

மகாயான பௌத்தர்க்குரிய லலிதவிஸ்த்தரத்தின் 16-ஆம் பகுதியான "பிம்பிசார அபிசங்கிரமனம்" என்னும் அத்தியாயத்தில் துறவு மேற்கொள்ளாமல் புத்தரைத் தடுத்துப் பூமியும் போகமும் நல்கி இலலறத்தில் இருத்தப் பிம்பிசாரர் முயன்ற செய்தியும்; உலகு உய்ய மெய்ப்பொருள் காணும் நாட்டத்தைக் கூறித் துறவு மேற்கொண்ட சித்தார்த்தரின் செயலும்; பிம்பிசாரன் முன்பே வேண்டியபடி புத்தரானதும் அவனுக்கு அறமுரைத்துப் பௌத்தனுக்கியதும் பிறவும் சொல்லப்பட்டுள்ளன. இந்நூல். கி. பி. 3, 4-ஆம் நூற்றாண்டில் சீன மொழியில் மொழி பெயர்க்கப்பட்டது கி பி 9-ஆம் நூற்றாண்டில் ஜாவாவில் போராபுத்தூரில் எழுந்த புத்தர் கோயிலில் இந்நூல் நுவலும் பொருள்கள் ஓவியங்களாகவும், சிற்பங்களாகவும் அமைக்கப்பட்டுள்ளன. (Literary History of Sanskrit

Buddhism p-21.) ஆதலின் விழுமிய இந்நூலினைப் பின்பற்றித் தமிழில் பிம்பிசாரக் கதை தோன்றியிருத்தல் கூடும். கிடைத்துள்ள இக்காப்பியத்தின நான்கடிகளும் அகவலாய் அமைந்துள்ளதால் இந்நூல் முழுமையும் ஆசிரியயாப்பில் இயற்றப்பெற்றிருத்தல் கூடும். விருத்தக் காப்பியங்கள் எழுந்த கி. பி. 7, 8-ஆம் நூற்றாண்டுகளுக்கு இக்காப்பியம முற்பட்டது என எண்ணலாம்.

புத்தகோஷரும் பிம்பிசாரக் கதையும்

சுத்தபிடகத்தின் முதல் பகுதியாகிய தீகநிகாயத்திற்குப் புத்தகோஷர் எழுதிய சுமங்கலவிலாசினி என்னும் உரையில் பிம்பிசாரக்கதை விரிவாக விளம்பப் பெற்றுள்ளது. அக்கதையினைச் சுருக்கிக் கூறுதல் ஆய்வுக்குப் பயன்படும்.

பிம்பிசாரன் மகதநாட்டு மன்னன். புத்தரின் போதனை கேட்டு வேள்விக் கொலையை விடுத்தவன் பௌத்தத்தைப் போற்றியவன். அவன் மனைவி வைதேகி கருவுற்ற காலத்துத் தனது வலத்தோளின் குருதியைக் குடிக்கும் வேட்கைமிக்கவளாய்த் தளர்ந்து மெலிந்தாள். அவள் ஆசையை உணர்ந்த பிம்பிசாரன் மருத்துவனை அழைத்துக் குருதியை எடுத்துக் கொடுத்துக் குடிப்பித்தான். அதனைக் குடித்தால், கருவிலுள்ள குழவி தந்தைக்குக் காலனுவான் எனச் சான்றோர் சாற்றியதைக் கேட்டு அஞ்சிய அரசி கருச்சிதைக்க முயன்றாள். அதனால் விளையும் தீவினையை விளக்கி அரசன் தடுத்தான். மகன் பிறந்ததும் அரசி கொல்ல முயன்றாள். சேடிப் பெண்கள் குழவியைக் காப்பாற்றினர். பின் இயல்பான தாய்ப்பாசம் குழந்தையைப் பேணி வளர்த்தது அஜாதசத்துரு எனப் பெயர் சூட்டினர். காளைப் பருவம் எய்தியதும் பிம்பிசாரன் மைந்தனை இளவரசாக்கினான். (சுமங்கலவிலாசினி பாகம் 1 பக். 134)

புத்தரிடம் பொறாமை பூண்ட அம்மான்சேய் தேவதத்தன் சித்திகள் பல கைவரப்பெற்றவன். அவற்றில் மயங்கிய அஜாதசத்துரு அவன் ஏவிய தீவினைகளைச் செய்ய முற்பட்டான். பிம்பிசாரன் புத்தரை ஆதரிப்பதால் முதலில் அரசனைக் கொல்லத் தூண்டினான் தான் புத்தரைக் கொல்வதாகவும் சூளுரைத்தான். இருவர் இறப்பிற்குப்பின் அஜாதசத்துருவும் தேவதத்தனும் முறையே அரசியல், மதத்தலைமையினை அடையத் திட்டமிட்டனர். அதன் விளைவாக அஜாதசத்துரு வெப்பமும் புகையும் சூழ்ந்த வெஞ்சிறையில் பிம்பிசாரனைச் சிறையிட்டு அரசியைத் தவிர வேறு யாரும் காணக்கூடாது என ஆணையிட்

டான். அரசியும் உணவு கொடுக்கக் கூடாது என எச்சரித்தான். ஆயினும் தன் உடம்பில் தேன், வெண்ணெய், நெய், எண்ணெய்க் கலவையினைப் பூசி அரசனைக் காணச் சென்றாள். பிம்பிசாரன் அரசியின் மெய்யினை நாவால் சுவைத்துப் பசி தணித்துக் கொண்டான் இதனையும் அறிந்த மகன் அரசியையும் பார்க்காமல் தடுத்துவிட்டான். உணவின்றியும் பிம்பிசாரன் வாழ்ந்தான் என்பதை புத்தகோஷர் சுவையாகச் சொல்லியுள்ளார், புத்தரின் போதனைகளையே உளமார எண்ணி உலாவிக் கொண்டிருந்ததால் பிம்பிசாரன் புதுப்பொலிவுடன் விளங்கினான் அதைக் கண்டும் பொறாத அஜாதசத்துரு அரசாங்க நாவிதனை ஏவிப் பிம்பிசாரன் பாதத்தைக் கீறி எண்ணெயும் உப்பும் இட்டுக் கதிரைக் கரியின் நெருப்பினால் சுடச்சொன்னான் நாவிதன் நணுகியதும் தன்னை விடுவிக்கத்தான் வருகிறான் என்று பிம்பிசாரன் எண்ணினான். ஆனால் வந்தவனோ ஆணையை நிறைவேற்றிவிட்டான் "புத்தம் தம்மம்" என்று ஒலித்தபடியே பிம்பிசாரன் உயிர் துறந்தான். மறுமையில் சாதும் மகாராஜிக உலகில் வேசவன போதி சத்துவர்க்குப் பணி மகனாக ஜவன வசபன் என்ற பெயருடன் விளங்கினான்.

பிம்பிசாரன் இறந்த அதே நாளில் அஜாதசத்துருவிற்கு மைந்தன் பிறந்தான் இறப்புச் செய்தியும் பிறப்புச் செய்தியும் ஓரே காலத்தில் அமைச்சர்கள் கேள்வியுற்று நற்செய்தியினையே ஓலையின மூலம் அஜாதசத்துருவிற்கு அறிவித்தனர். அப்பொழுதுதான தந்தைப் பாசம் எத்தகையது என்பதை உளமார உணர்ந்தான் அஜாதசத்துரு. உடனே தந்தையை விடுதலை செய்யக் கட்டளை பிறப்பித்தான் ஆனால் காலம் கடந்த கட்டளை பிம்பிசாரன் இறப்பினை அறிந்து புலம்பிய வண்ணம் தாயை அடைந்து தந்தை தன்னிடம் எப்பொழுதாவது அன்பு பாராட்டியது உண்டா? என்று வினவினான். தாய், "மகனே, உன் விரலில் தோன்றிய கட்டியின் வலி தாங்காமல் நீ அழுதாய். ஒருவராலும் உன்னை அமைதிப்படுத்த முடியவில்லை. பின்னர் நீதி மன்றத்தில் இருந்த உன் தந்தையிடம் எடுத்துச் சென்றதும் உன் விரலைத் தன் வாயில் வைத்ததும் கட்டி உடைந்தது; பிள்ளைப் பாசத்தின் பெருக்கத்தால் சீழும்செந்நீரும் சிந்தவிடாமல் தானே குடித்துவிட்டார். எனக் கூறி முடித்தாள். இதனைக் கேட்டதும் அழுது புலம்பி அரற்றினான் அஜாதசத்துரு...

தேவதத்தனின் தூண்டுதல்களைப் பின்னர் அறவே அலட்சியம் செய்துவிட்டான் ஆயினும் தேவதத்தன் கிஜ்ஜகூட மலையின் உச்சியில் இருந்து பெரும் பாறைகளைப் புத்தரின் மேல்

உருட்டிவிட்டான் நளகிரி என்ற யானைக்குக் கள்ளூட்டிப் புத்தர் மீது ஏவினன். முடிவில் முயற்சிகள் எல்லாம் வீணாகி இரக்கத்திற்கு ஆளானன். தன் பிழைகளை எண்ணிப் பேழ்கணித்த அஜாதசத்துரு அரண்மனைப் பெரு மருத்துவன் சீவகனுல் அறிவு கொளுத்தப்பெற்றுப் புத்தரிடம் மன்னிப்புக்கோரிச்சரண் புகுந்தான். பேரருட் கடலாகிய புத்த பகவான் ஆறுதல் அளித்து அறவுரைகள் புகட்டி அவனை நல்வழிப்படுத்தினர். அவனுக்குப் புத்தர் புகட்டிய அறக்கருத்துக்கள் சுத்த பிடகத்தின் தீகநிகாயத்தில் உள்ள சாமஞ்ஞபல சுத்தாந்தத்தில் காணப்படும். இச்சுத்தாந்தத்தின் முடிவில் "சந்தா வித்வா சம்சரித்வா துக்கச் சந்தம் கரிஸ்சந்தி" எனக் கூறும் பகுதி நோக்கத்தக்கது. இதன் பொருள், வினையில் சுழலும் கற்றோரும் மற்றோரும் எல்லோருமே துன்பத்திற்கு முடிவு காண்கிறார்கள் என்பது

நெஞ்சத்தை நெகிழச் செய்யும் உருக்கமான காட்சிகளைக் கொண்ட பிம்பிசாரனின் கதை காப்பிய வடிவம் பெறும் தகுதி படைத்ததுதான் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

எனவே, கி. பி 3-ஆம் நூற்றாண்டில் எழுந்த இலலிதவிஸ்தரம் கி. பி. 5-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புத்தகோஷர் எழுதிய சுமங்கலவிலாசினி ஆகியவற்றைப் பயின்ற தமிழ்ச் சான்றோர் பிம்பிசாரக்கதை என்னும் தமிழ்க் காப்பியத்தைப் பாடியிருத்தல் வேண்டும். இக்காப்பியம் கி பி 6-ஆம் நூற்றாண்டில் யாக்கப்பெற்றது எனலாம். அகவலில் காப்பியம் பாடும் மரபு இக்காலத்திற்குப் பின் மெல்ல மறைந்து விருத்த யாப்பில் காப்பியம் புனையும் புதுமை தோன்றியதெனலாம்.

'யாதும் ஊரே, யாவரும் கேளிர்'

திரு. K சோமசுந்தரம், B. A , B. L., தஞ்சை.

முன்னிதழ்த் தொடர்ச்சி

சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் குறிக்கும் பொருட்பேறுடைய சொற்களைப் பூங்குன்றனார் தம் புலமைத் திறத்தாலே தொடுத்தமாட்சி ஈண்டு ஆயத்தக்கது. மொழி பொருட் காரணமாய்ந்தும் அஃதோடு சொற்காரணமும் உடன் கண்டு கொண்டு கணியனார் இப்பாட்டினை யாத்து, அதனானே மக்கள் மேற்கொள்ளும் அருள் வாழ்வை அறிவுறுத்தியுள்ளார். தமிழ்ச் சொற்களின் இயலையும் செயலையும் நம்மதிவாணர் செவ்விதினறிந்ததினாலே, இப்பாட்டினிலே அருங்கருத்து வளமும் நுண்பொருளமைதியும் சுவைபட அமைந்துள்ளன. சொற் பொருள் இனிமைபெற்ற இப்பாட்டு, ஆற்றல் சான்ற சிலவாய சொற்களைக் கொண்டு சீரிய கருத்தோடு மருளகற்றி விளங்குவதினான், சொற்களுக்குச் சுதி கூட்டியேற்றும் பூங்குன்றனார் எடுத்தாளும் அச்செவ்விய சொற்கள் உயிரரோட்டமும், ஓவிய நயமுடையதாய் ஒளி பெறலாயின. மற்றும் அவை உலக சமுதாய உணர்வுக்கும், ஒற்றுமை நோக்கிற்கு முரிய இரக்கவுணர்வையும், அன்புப் பெருக்கத்தையும் உளப் பண்பாட்டினையும் உருவாக்கும் வல்லமை கொண்டு உலகையும் இழைகின்ற இசை நயத்தாலே ஒருங்கே ஆட்சி புரியும் ஆற்றலையுடையதாதலை உன்னுக. மற்றும் யாதொரு சிறு சொல்லேனும்வறிதே விரவாமல் உய்த்துணருந்தோறும் நவில்தொறும் நூல் நயம் போன்று மெய்யின்பம் தருவது இப்பாடலே யாகும்.

இக் கவிதைப் பாட்டின் கண் வந்துள்ள சொற்களின் ஒழுங்கையும் சொற்றொடர்களின் மேன்மையும் ஆயின், அவை பின்னும் சுருக்கமுடையாத தன்மைமேவி பொருட் செறிவினை உணர்த்திக் கொண்டே ஆற்றொழுக்கு போல ஓடுவனவாகிய வன்மையும் வனப்பையும் பெற்றுள்ளன. சொல்லானது எல்லா நலன்களின் கருவூல மென்பதை இப்பாட்டின் துணைகொண்டு அறியப்படவே இப்புறப்பாட்டு, சொல்லே விளக்காக அமையப் பெற்றுள்ளதைக் காண்க. இவ்வாறு காணுங்காலை இப்பாட்டின் சொற்கள் பொருளொடு ஒன்றிக் கலக்கும் ஒருமையில் மனம் திளைத்தால், அது விவேகத்தோடு கூடிய பேரின்ப நிலையினை எய்து மென்பது உறுதி. மற்றும் குன்றனாரது சொற்கள் எளி

மையாலும் ஒளியாலும் நுண்மையாலும் ஆற்றலும் நயமும் கொண்டு அவரது உள்ளத் தெளிவின் பொலிவையும், பண் பியல்பின் வலிவையும் புலப்படுத்தி கவிதை யின்பத்தைப் பெற வைப்பதினுன், இப்பாட்டு அவரது பண்புடைய வுள்ளத் தின் சொல்லோவியம் எனக் கூறுவது மிகையாகாது. அறிவா ளுன்ற கவியின் வாழ்வே வாக்கென்பது குன்றனுர்பால் சாலப் பொருந்தும்

கணியனுர் இப்புறப்பாட்டின்கண் சொற்களின் பிறப்பினை யும் வளர்ப்பினையும் சீரிய நிலையில் அனுபவித்து அவைகளைச் சிறப்புற அமைத்து இலக்கிய மணங் கமழ உணர்வைத் தூண்டி அறிவாற்றலை செம்மைப்படுத்திவிடுகிருர் இப் பாட்டினுள் பயின்றுவரும் சொற்கள் யாவும் பழக்கமாக நாம் பேச்சு வழககில் நாடொறும் வழங்கிவருபவை. ஆனுல் குன்றனுர் இச்சொற் களைத் திறனுகக் கையாளும் முறையில் அவை ஆற்றல் பெற்று புதியதோர் பொருளுணர்ச்சியும் ஒலியின்பமும் கற்பனைக் கவினும் கொண்டு கவிதைப் பொலிவினைச் சிறப்பாகப் பெறு கின்றன. இத்தகைய மாண்பினுல் புறநானூற்றுச் செய்யுட் களிலே பூங்குன்றனுரது பாட்டு தனிப்பட்ட கவிதையாய் மலர்ந்து விளங்குகிறது இத்தகைய விளக்கம் கவிஞரது சொற்கள் கவிதையில் எளிதாக உறவுகொள்ளும் முறையில் காணப்படும்.

எனவே, கணியனுரது சொல்லும் பொருளும் இப்பாட்டில் தோய்ந்தமைந்து அறிவு நிலையினையும் அனுபவ நிலையினையும் முருகுணர்ச்சியோடு விளக்க வந்துள்ளதைத் தெளிந்து கொண்டு உண்மையுணர்தல் சிறப்பு ஊர், கேளிர் எனப் பேச்சு வழக்கில் வரும் சாதாரணச் சொற்களின் வழி சகோதர நேய தத்துவம் உணர்த்தப்பட்டது காண்க. நாம் மன அமைதி யோடு இன்பமாக ஒழுக்க விழுப்பத்துடன் எங்கே இருக்க இயலுமோ அதுவே நமது ஊர். உலகமே உருவாகக்கொண்ட இறைவனுக்கு யாதும் ஊராதலின், அவ்விறை பணிகொண்ட மக்களுக்கு யாதும் ஊரே யாவரும் கேளிரேயாகும். கேள் என்பது அன்பு கேளுடையவர் கேளிர். எனவே, கேளிர் அன்புடைமைக்குரியவர். 'புலப்பேன் கொல் புல்லுவன் கொல்லோ கலப்பேன் கொல் கண் அன்ன கேளிர் வரின்' என்பது பொய்யாமொழி. பழைமை தொட்டு வந்த நட்புரிமை யுடைய கேளிரை. வள்ளுவர் கிளைஞரென்று 'கேட்டினு முண்டோ ருறுதி கிளைஞரை நீட்டி யளப்பதோர் கோல்' என்ற

குறளில் குறிப்பிட்டதுங் காண்க. தீது, நன்று. இனிது, இன்னாதது. பெரியோர், சிறியோர், நோதல். சாதல், வியத்தல், இகழ்தல், நீர்வழிப்படுதல், முறைவழிப்படுதல் என்றின்னோரன்ன சொற்கள் பொருட்சிறப்பினைப் பெற்று உலக இயலையும், உயிர் இயலையும் இறையியல்பையும் புலப்படுத்துகின்றன. இதனால் இக்கவிதையில் வழங்கப்படும் சொற்களின்மூலமாக நிலையாமையுணர்ச்சி நிலைபெறுமாறு காக்கப்படுவதும் காண்க. மற்றும் அன்றாடப் பழக்கத்திலுள்ள உணர்ச்சிச் சொற்கள் கவிதை வடிவுடன் ஒழுக்க நெறியியல்பையும் வெகு எளிதாக வெளிப்படுத்தி பாட்டிற்குச் சுவைபட உயிரையூட்டி விடுவதையும் நோக்குக. அழகு விளங்கும் இத்தகைய சொல்லாட்சியால் கவிஞர் நம் முணர்வைத் துள்ளும்படி செய்து உள்ளத்தையும் கவர்ந்து, தனது கருத்துக்களும் எண்ணங்களும் அனுபவங்களும் கவிதை மதிப்பினுக்குப் பிறப்பிடமாகத் தேக்கிவைத்து மக்கட் பண்பமைதிக் காப்பினை நிலைபெற வைத்துள்ளார். தவத்தினில் மக்கள் மனதை வுணர்த்த வீட்டு பிறவி நோக்கத்தை நிறைவேற்றும் முறையில் அமைந்து நிற்கும் இப் பாட்டு. அதனானே அழகாலும் இனிமையாலும் மாட்சிமை யெய்திருப்பதை நன்குணர்ந்து கற்றுப் பயில்வாரெவரும் செல்வருட் செல்வர்: அல்லாதார் வறியரில் இருமை அறியாத வறியரே.

வாழ்வியலின் தத்துவத்தை இறை யியல்பொடு கூட்டிச் செல்லும் பண்புடைய இப்பாட்டு நவில்தொறும் கவிதை நயத்தையும். ஆய்தொறும் அறிவு நலத்தையும் நல்கும்மாண்புடையது சிந்தனைச் சிறப்பினையும் சிந்தனைக்கு வலுவூட்டும் உணர்ச்சியினையும் இப்பாட்டு தெளியச் செய்து, வாழ்வையும் தாழ்வையும் ஒப்ப நோக்கும் மனப்பான்மையால் பொதுவாக வாழ்வில் மட்டும் இடும்பையை எளிதில் வெல்லும் வகையினை இயம்பா நிற்கும் இறப்பைக் கூட்டும் மன மாசுகள் பிறப்பிற்குக் காரணமாகிய வினைகளை விளைவிப்பதினால், அவ்வினைகளை மீண்டும் வளரா நெறிமுறையில் நின்று வாழ்பவர் பிறவாமை எய்துவரென்ற உண்மையினை இப்பாட்டு நன்கண் குறிக்கின்றது ஓர்க.

தன் காலத்தின் தேவையினை நிறைவுபடுத்த வேண்டி தானுணர்ந்த உண்மைக்கே கவியணி செய்ய இப்புறப்பாட்டின்கண், பூங்குன்றனார் 'யாதும் ஊரே யாவருங் கேளிர்' என்ற கோட்பாட்டிற்குரிய அறிவை அறியும் அறிவினையே வற்புறுத்தி. ஒருவர் தன்னையே ஆய்ந்தறியும் நல்லாற்றலைப் போற்றுவாராயினர். மற்றும் வாழ்க்கையினை அரித்துத் தன்

ளும் கேடும் பகையும் ஒடுங்கி அருகியே போகுமென்ற அனுபவ உண்மையினை, புலனடக்கங் கொண்ட பூங்குன்றனார் இதனில் செறிய விளங்க வைத்து, மக்கள் இணைந்தமைந்து ஒட்ட ஒழுகலில் இயங்கும் அன்பு நெறியில் எவ்விதம் ஆக்கம் புகழ் தாங்கித் தோன்றுமென்பதை உன்ன வைத்தார். யாதும் ஊரே எனும் நிலத்து நெறியோடு யாவருங் கேளிர் எனும் உளத்து நெறியும் ஒத்தது எனவும் குறிப்பாகக் காட்டியுள்ளார். மற்றும் பல திறப்பட்ட ஊர்கள் உலகின் கண்ணுளதாயினும், அவ்வூர்களிலுள்ள பல் குணமும் பன்மனமுமுள்ள மக்கள் யாவரும் உயிரின் ஊதியம் கருதி யாதும் ஊரெனக் கொண்டு, சிறந்தது பழகும் தெளிவுடன் அகநோக்கு பெற்று மனவொருமையால் ஒற்றுமைப்பட்ட கேளிர்களாகவும் வயங்கினல் யாவரும் மண்ணில் நல்ல வண்ணம் வைகலும் வாழலாமென விதந்தோதுவாராயினர் உலக சமுதாயத்தின் ஒற்றுமை இயக்கவுணர்வை ஆத்மஞானத்தால் வளரும்படி யாதும் ஊரே யாவரும் கேளிரெனக் குன்றனர் எடுத்துக் காட்டிய வாய்மை விம்மிதத்தையும் விழுப்பத்தையும் ஒருங்கே பயக்கும் அருமைப் பாடுடையதாய் அவரது பண்பாட்டுப் புலமையின் காழ்ப்பேறிய நிலையினைச் சுட்டுவதாகுமென்பது ஈண்டு எண்ணுதற்குரியது

தமிழ் மரபு கடந்து நிற்கும் இப்பாட்டுமன்பதைக் குரியதாகவுள்ள மெய்ப் பொருளினை நாடும் அமைதி வாழ்வின் உட்பொருளை உணர்த்தி அதன்வழி இன்ப துன்ப காரணங்களை அறியவைத்து அவற்றினின்றும் மீட்சிபெற பேரமைதி நிலவும் மனப் பக்குவத்தையும் ஞானத் தெளிவையும் திருந்திய பண்பினையும் அளிக்க வல்லது. மற்றும் நல்வாழ்வும் அல் வாழ்வும் மனத்தின் நினைவு நலத்திற்கேற்ப அமையுமாதலான், வாழ்வை இனிமையாக அமைத்துக் கொள்ளும் அறிவுடைமையினைப் புகட்டி உலகமெங்கும் வாழ கேடொன்றில்லை யென்பதை விளங்க வைத்து உலகின் கண்ணுள்ள பேதங்களோடு வேற்றுமை வேறுபாடுகள் யாவற்றையும் ஒன்றாக வைத்துக் காண்பதுவே காட்சி யென்ற உண்மையினை உரைக்கும் இயல்புடைத்து பகைகளது மனத்தால் வளரும் பண்பாட்டொழுக்கத்தை அறமாக்கும் பொருட்டே, பண்பாட்டுறவைப் போற்றி பாடறிந்தொழுகும் பண்பாட்டு நல்லுணர்ச்சிகளை இப் புறப்பாட்டு சிறப்பித்துள்ளதைக் கூர்ந்து நோக்குங்காலை, அகத்தையும் புறத்தையும் வகுத்து, அவற்றின் மூலம் வாழுமுயிர்களை ஈடேற்றும முறையால் வாழ்விலக்கணமாக ஆக்கிக் கொண்டெய்திய தமிழர்தம் பண்டைய சீர்த்த நாகரீக நிலை ஒரோவழி இனிது துணியப்படும்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம், தமிழ்த்துறை ஆசிரியர் ஒன்பதாவது கருத்தரங்கு

மணிமேகலைக் கருத்தகம் - 1.

அண்ணாமலைநகர்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறையின் சார்பில் ஆசிரியர் ஒன்பதாவது கருத்தரங்கு பிப்பிரவரி 8, 9 ஆகிய இருநாட்களிலும் அண்ணாமலை நகரில் சிறப்புற நடை பெற்றது. முன்பு நடந்த ஏழாவது. எட்டாவது கருத்தரங்கு கள் சிலப்பதிகாரத்தைப் பற்றியவை என்பது நினையத்தகும்.

இவ்வரங்கிற்கு மணிமேகலைக் காப்பியம் முழுப் பொரு ளாகக் கொள்ளப்பெற்றது. மணிமேகலையின் பாத்திரங்கள், தெய்வங்கள், இயற்கையிறந்த செய்திகள். யாப்பு, கதை வடி வம், சைவம், சாங்கியம், மணிமேகலையின் காலம் முதலான பலபொருள்கள் பற்றி தமிழ்த் துறையாசிரியர் பதினெழுவர் ஆய்வுக் கட்டுரை படித்தனர். பல்கலைக் கழகப் பிறதுறைப் பேராசிரியர்களும். பிறதுறை மாணவர்களும் இக்கருத்தரங் கில் கலந்து கொண்டனர்.

தமிழ்த்துறைப் பேராசிரியர் டாக்டர் வ. சுப. மாணிக்கம் தம் வரவேற்புரையில் படிக்கும் காலத்திலேயே மாணவர்களி டையே ஆராய்ச்சித் திறனைப் பெருக்குவது இக்கருத்தரங்கின் நோக்கமென்றும், கலந்துரையாடலில் மாணவர்களும் கலந்து கொள்வதால் ஆசிரியர்களோடு அறிவுறவு ஏற்படுவதற்கு இத் தகைய அரங்குகள் வாய்ப்பளிக்கின்றன என்றும், கருத்தரங்குக் கட்டுரைகள் அச்சுருப் பெற்றால் ஏனைய அறிஞர்கட்கும் பயன் படுமெனவும் சொல்லினர்.

கருத்தரங்கினைத் தொடங்கி வைத்துத் தமிழில் தொடக்க வுரையாற்றிய துணைவேந்தர் டாக்டர் சா. ப. ஆதிநாராயணன் தமிழ்த்துறை இடையறுது நடத்திவரும் கருத்தரங்கினைப் பாராட்டியதோடு மாணவர்களுக்கு அறிவை வளர்க்கும் இந்த அறிவரங்குகளை ஊக்குவிப்பது பல்கலைக் கழகத்தின் நோக்க மெனவும், மாணவர்கள் வினாக் கேட்கவும் ஆசிரியர்கள் பொறுப் பாக மறுமொழி கூறவும் நடக்கின்ற இக்கருத்தரங்கு இன்றைய கால வளர்ச்சி எனவும், எடுத்துரைத்தார்.

மணிமேகலைக் கருத்தரங்கின் முதற் பகுதி 8—2—75 பிற்பகல் துணைப்பேராசிரியர் திரு. க வெள்ளைவாரணன் தலைமையில் நிகழ்ந்தது. டாக்டர் மு. கோவிந்தசாமி மணிமேகலையின் காலம் என்னும் கட்டுரையில் கி. பி. 6-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த தர்மபாலர் அறவண அடிகளாக இருக்க வேண்டுமெனவும், மணிமேகலையில் வரும் தருக்க நூற்பகுதி திக்நாகர் எழுதிய நியாயப் பிரவேகத்தைச் சார்ந்திருக்கலாம் எனவும் இதன் காலம் கி பி. 5 அல்லது 6ஆம் நூற்றாண்டாகலாம் எனவும் சில சான்றுகள் காட்டியுரைத்தார். மகாவித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர் நகர் அமைப்புகள் என்னும் கட்டுரையில் மணிமேகலை கூறும் சம்பாதிவனம், நாளங்காடி, மலர்வனம் என்பன இன்றுள்ள புள்ளிருக்கு வேளூர், இலையமுதுகூடம் பெருந்தோட்டம், சாயாவனம் ஆகிய இடங்களைக் குறிக்கும் எனவும் புகார் நகரின் வடக்கெல்லை சீர்காழி வரை இருந்தது என்றும் குறித்தார். திரு அ. ஞானப்பிரகாசம் மணிமேகலைப் பாத்திரப் பெயர்கள் என்னும் ஆய்வுத்தாளில் பாத்திரப் பெயர்கள் எழுவகையாக அமைந்துள்ளன என்பதை வகைப்படுத்திக் காட்டி, இளம்பூதி என்ற பெயர் அப்பூதி என்பதுபோல, திருவெண்ணீற்றைக் குறிக்குமெனவும், சாலி என்னும் பெண்பாற் பெயர்க்குச் சால என்னும் உரிச்சொல்லோ சாலி என்னும் நெல்லின் பெயரோ காரணமாக இருக்கலாம் எனவும் விரிவாக எடுத்துக் காட்டினர். திரு. சி. வேங்கடபதி அரசியலறம் என்னும் ஆய்வுரையில் இல்லறத்தை நீக்குவது மணிமேகலையின் கருத்தன்று. பாலின்பத்திற்குரியராய பரத்தை மரபினரின் ஒருத்தியைத் துறவியாக்கித் தீயவர்களைத் தண்டிப்பதே இக் காப்பியத்தின் நோக்கம் எனக் காட்டினர். திரு கொ இலக்குமணசாமி மணிமேகலையில் சிலம்புச் செய்திகள் என்ற ஆய்வில் இரு காப்பியத்திற்கும் ஒப்பான கதைப் பகுதிகளை எடுத்துக்காட்டி, மாறுபட்ட சிலவிடங்களையும் சுட்டினுர். மணிமேகலை புத்த மதத்தைச் சார்ந்த பின்னும் தலை மழியாது கூந்தலோடு இருத்தல் மதுரைமா தெய்வம் தோன்றியபின் மதுரையைத தீயிட்டதாகக் கொள்ளுதல் கண்ணகியைத் தீவைத்த குற்றமுடையாளாகச் சாற்றுதல் கற்படிமத்தில் கண்ணகியொடு கோவலனும் காணப்படுதல் என்பவை அவர் குறிப்பிட்ட சில முரண்கள்.

8—2—75 முற்பகல் கருத்தரங்கு காலை 9.30 மணிக்கு தொடங்கியது விரிவுரையாளர் திரு. கொ. இலக்குமணசாமி தலைமையில் நிகழ்ந்தது. பழநியப்பன் மறுபிறப்புக் கொள்கை

சங்க காலம் முதல் தமிழர்க்கு உடன்பாடு எனவும் மணிமேகலையில் முற்பிறப்பே யன்றி வருபிறப்பும் சொல்லப்படுகின்றது என்றும் தருமபதம் என்ற முத்தி முற்பிறப்பினை உணர்ந்தவர்களுக்கே உரியது என்பது புத்தசமயக் கொள்கை எனவும் புலப்படுத்தினர். மணிமேகலையிற் சைவம் என்னும் பொருட் கட்டுரையில் திரு க வெள்ளைவாரணன் சைவ வாதியின் கூற்றாக வரும் பகுதிகளில் சிவனுடைய இறைத்தன்மை முழுதும் சாத்தனரால் சுட்டப்பட்டுள்ளது, ஈசன் என்ற பெயர் சிவனுக்கே உரியது என்பது தெளிவாகிறது. நாவுக்கரசரும் மணிவாசகரும் சொல்லிய பதியின் இலக்கணம் இவ்வரிகளில் புலப்படுத்தப்பட்டுள்ளது என மொழிந்தனர். கவின்கலைகள் என்னும் பொருள் பற்றி மொழிந்த திரு. செ வைத்திலிங்கம் புனையா ஓவியம் கண்கவர் ஓவியம், சித்திரைச் செய்கைப்படாம், கன்னித் தெய்வதம் எனவரும் கலைக் குறிப்புக்களையும், பாவை என்ற சொல் சிற்பக்கலைக்கும் ஓவியக் கலைக்கும் பொது என்பதையும் சுட்டி, கட்டடக்கலை, கூத்துக்கலை இசைக்கலைக் குறிப்புக்கள் இக்காப்பியத்தில் நிரம்பியிருப்பதைப் புலப்படுத்தினர். சாங்கியம் என்ற தலைப்பில் டாக்டர் சோ. ந. கந்தசாமி மாத்துவருக்குப் பல நூற்றுண்டுகளுக்கு முன்பே சாத்தனர் சர்வ தரிசன சங்கிரகம் பாடிய முதல் தத்துவப் பேரறிஞர் என்றும், பிரகிருதியின் இயல்பு, பரிணாமம், ஒடுக்கம், புருடனின் இயல்புகள் முதலிய சாங்கியக் கொள்கைகளைச் சாத்தனர் எடுத்துக் காட்டியுள்ளார் எனவும் விளக்கினர் மணிமேகலைத் தெய்வங்கள் என்ற தலைப்பில் திரு. துரை பட்டாபிராமன் மணிமேகலையில் வரும் தெய்வங்கள் பலவற்றைத் தொகுத்துக் காட்டி, சம்பாபதி, சிந்தா தேவி தீவதிலகை முதலானோர் அறங்கூறும் தெய்வங்களாகக் காட்சியளிக்கின்றனர் எனச் சுட்டினர். மணிமேகலைக்குள் ஒரு காப்பியம் என்ற தலைப்பில் திரு. ஆறு. அழகப்பன் உலகில் பெருங் காப்பியங்களிலிருந்து புதிய வழிக் காப்பியங்கள் தோன்றியிருக்கின்றன என்பதற்குச் சான்று காட்டி, மணிமேகலையிலிருந்து மூன்று வகைக் காப்பியங்கள் தோன்றுதற்கு மேலும் இடமுண்டு என வழிகாட்டினர்.

கருத்தரங்கின் மூன்றும் பகுதி பிற்பகல் 2—30 மணிக்குத் தொடங்கியது. தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் வ. சுப. மாணிக்கம் தலைமையேற்றார். உவமைகள் என்னும் தலைப்பில் திரு. சு. சாமிஐயா தனிச்செய்யுள் உவமைக்கும் தொடர்நிலைச் செய்யுள் உவமைக்கும் உரிய வேறுபாட்டினைக் காட்டி, தாமரை தண்மதி சேர்ந்ததுபோல என்ற உவமையின் ஆழத்தை எடுத்

துக் காட்டினர். சித்திரபதி என்னும் பாத்திரத்தை ஆராய்ந்த திரு. சா. மு. பாலசுப்பிரமணியன் குலப்பற்றும், பொருட்பற்றுமே சித்திராபதியின் பரத்தை நோக்குக்குக் காரணம் என்றார். மணிமேகலையில் இயற்கையிறந்த செய்திகள் என்னும் தலைப்பில் கட்டுரை படித்த திரு. ஆ இராமசாமிப் பிள்ளை காப்பியங்களில் தெய்வங்கள் பங்கு கொள்வது எல்லாக் காப்பியங்களிலும் இடம் பெறும் இலக்கிய மரபு என்று கூறி இதற்கு ஆறு காரணங்களையும் வகைப்படுத்திக் காட்டினர். மணிமேகலையில் யாப்பமைதி என்ற ஆய்வியற் கட்டுரை படித்த திரு ந. வீ. செயராமன் மணிமேகலையில் இருப்பத்தேழு காதைகள் நிலைமண்டிலமெனவும் மூன்று காதைகள் இணைக்குறளாசிரியப்பா எனவும் எல்லாப் பாக்களுமே 'என்' என்னும் ஈற்றுள் முடிவன வெனவும் இந்த ஈறு பிற்காலத்தாரால் சுட்டப்படவில்லை என்றும் கூறினர் மணிமேகலையின் கதை வடிவங்கள் என்ற தலைப்பினை ஆராய்ந்த திரு இரா இராமலிங்கம் நிகழ்ச்சி முறையாய்வு என்ற அடிப்படையில் மணிமேகலைக் கதையை ஆராய்ந்து மூலக்கதை போலவே சில துணைக்கதைகளையும் சாத்தனர் படைத்துள்ளார் எனவும் இருமுனை மும்முனைக் கதைகள் இக்காப்பியத்தில் நிறையவுள எனவும் கதை சொல்லும் திறனில் ஆசிரியர்பால் ஒருவகைக் குறை காணப்படுகிறது என்றும் எடுத்துக் காட்டினர்.

கருத்தரங்கின் பார்வையாளராக வந்திருந்த தமிழ் வடமொழி நிறுவன இயக்குநர் திரு. மு அருணசலம் தமிழகத்திற்கும் கிரேக்க ரோமானிய நகரங்களுக்கும் உள்ள பண்பாட்டுத் தொடர்புக்குச் சான்று காட்டி, வணிகவுறவு போல பண்பாட்டு உறவும் இருந்தது என மொழிந்தார். மாணவர்கள் திரளாகக் கருத்தரங்கிற்கு வந்து இங்கு வினக் கேட்கும் அறிவுடைமையைப் பாராட்டினர் முன்னுள் ஆசிரியர் திரு. வி. மு சோமசுந்தரம் பிள்ளை. உவமை. மணிபல்லவம், மணிமேகலை முதலிய சொற்களின் பிறப்பியலை ஆராய்ந்து காட்டினர்.

தலைமையேற்ற தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் வ. சுப மாணிக்கம் இக்காலத்திற்கும் ஏற்ற சமுதாய அறங்களைக் கூறும் மணிமேகலைக் காப்பியத்தைப் பரப்ப வேண்டும் எனவும். இக்காப்பியம் புத்த சமயத்தைக் கூறுவதாயினும், அதனைப் பரப்ப எழுந்ததில்லையெனவும், தமிழ் வளர்ச்சி, தமிழாசிரியர்கட்கும் தமிழ் படிக்கும் மாணவர்கட்கும் மட்டும் உரியதன்று. தமிழர்க்கெல்லாம் உரியது எனவும் அறிவுறுத்தினர்

இறுதியில் திரு சிவ திருநாவுக்கரசு நன்றி கூறக் கூட்டம் முடிவுற்றது.

சென்ற இதழின் தொடர்ச்சி

தமிழ்நூற் குறியீட்டு விளக்கம்

பேராசிரியர் ச. பாலசுந்தரம், கரந்தைப் புலவர் கல்லூரி.

அவ்வாறுயின் வடமொழியாளர் தமிழகத்தைத் திராவிடம் என்று சுட்டி வழங்கியமைக்குக் காரணம் இருத்தல் வேண்டு மன்றோ? ஆம்-சிந்துவெளியில் வந்து தங்கி ஆண்டு வாழ்ந்த பழங்குடி மக்களோடு நாளடைவில் கலந்து வாழ்ந்த ஆரியர்கள் தம் மொழியைச் செப்பனிட்டுச் சமற்கிருதமாக்கி அம் மொழியில் நூல்கள் புனையத் தலைப்பட்ட ஞான்று தென்னகம் சமய சமுதாய அரசியல் நாகரிகங்களிற் சிறந்து விளங்கியது. மொழித் துறைக்குச் சிறப்புமிக்கதொரு அமைப்பினைத் (கழகம்) தோற்றுவித்து மொழியை முத்திறமாகப் (இயலிசை நாடகம்) பகுத்துக்கொண்டு அகமும் புறமும் பற்றி அளவற்ற நூல்களை வரைந்து திகழ்ந்தது. அரசர்கள் அறிஞர்களோடிணைந்து கழகத்தி லமர்ந்து நூலாய்ந்தனர். நூலியற்றினர். புலவர்களைப் போற்றிச் சிறப்பித்தனர் இவ் அரசர்கள், மறைந்த ஏழகமாகிய குமரிக்கண்டத்தில் வாழ்ந்த மக்களின் வழி வந்தவர் ஆதலின் பழங்குடியினர் என அழைக்கப்பெற்றனர். இவர் தம் குடிவழி மரபால் சேர சோழ பாண்டியர் என முப்பிரிவினராதலின் தென்னகத்து வேந்துரிமையை மூன்றுகப் பகுத்துக் கொண்டு ஆண்டனர். எல்லைகளும் நிலப்பரப்பும் மாறினுலும் சேரநாடு பாண்டிநாடு சோழநாடென்ற வேந்துரிமைப் பெயர் மாருமல் மூன்றுக வைத்தே ஆண்டுள்ளனர். இவர் தம்முள் கொள்வினை கொடுப்பு வினைகளால் இணைந்த போதும், குறுநில மன்னர்களும் வேளிரும் பிறரும் வலிமை பெற்று விளங்கிய போதும் தம் சிறப்புரிமையை விடாமல் மூவராகவே ஆட்சி புரிந்து கலையையும் பண்பாட்டையும் வளர்த்து வந்துள்ளனர். சிலபோது வேளிரும் பிற குறுநில மன்னர்களும் இம்மூவரினும் ஆற்றலும் சிறப்பும் பெற்று வாழ்ந்துள்ளனர் எனினும் அவர்கள் எக்காலத்தும் வேந்துரிமை பெற்றுரில்லை. இவை யாவும் அழிந்தவை போக எஞ்சியுள்ள சங்க இலக்கியங்களாலும் தொல்காப்பியத்தாலும் நாம் அறியும் வரலாற்றுண்மைகள்.

மூவேந்தர்களின் சிறப்பையும் அவர் தம் நாட்டையும் தமிழ் நூல்களே யன்றித் தொன்மை சான்ற வடநூல்களும் நன்கு எடுத்தியம்புவதைப் பின்னர்க் காண்போம். தென்னகம் மூவர்க்கே உரிய நாடென்ற அடிப்படையிற்றுன் தமிழகத்து

அரசர்களைச் சுட்டவந்த தொல்காப்பியர் புறத்திணையியலில் "போந்தை வேம்பே ஆர் என வரூஉம் மாபெருந் தானையர் மலைந்த பூவும்" என மூவேந்தர்தம் அடையாள மாலையை வைத்துப் படைகள் மூன்றே என வரைந்து காட்டியுள்ளார் தமிழக மூவேந்தருக்கும் தனித்தனியே கொடியும், படையும் தாரும், யாறும், நாடும், நகரும், மலையும் அமைந்திருந்தன. இம்மரபுபற்றியே தமிழக மக்கள் எதனையும் முப்பாலாகக் கொண்டு மூன்று மூன்றாகப் பகுத்துப் பார்க்கும் திறனைக் கையாண்டுள்ளனர். அறம். பொருள், இன்பம் போன்றே காலம், உலகம், உடம்பு முதலாயினவற்றை மூன்றாகவே பகுத்துள்ளனர். எழுத்து, சொல், பொருள்—கைக்கிளை ஐந்திணை பெருந்திணை உயிர் மெய் சார்பு முதலாயினவும் இத்தகையனவேயாம். இவ்வழக்காறு காரணமாகவே தமிழகம் மூவர்தேம், மூவர் நாடு - மூந்நாடு, மூவர் வரைப்பு என்னும் பெயரால் திகழ்ந்துள்ளமையை அறியலாம்.

இந்நிலையிற்றான் வடவர்கள் மூவரகமாகிய தமிழகத்தை மூவரிடம் மூவர்தேம் என்ற பொருள்படத் திராவிடம் என மொழிபெயர்த்துக் கொண்டுள்ளனர். இவ்வாறே தமிழகத்தில் உள்ள ஊர்ப் பெயர் முதலியவற்றை இடைக்காலத்து நூல் எழுதிய வடமொழியாளர்கள் மொழிபெயர்த்துள்ளமையைக் கீழ்வரும் எடுத்துக்காட்டுகளால் உணரலாம் வேதாரண்யம், விருத்தாசலம், கும்பகோணம், கரி (கைம்பா) கீரநதி (பாலாறு) முதலியவை காண்க, மற்றும் அவர்கள் மூவர் நாடுகளாகிய சேர, பாண்டிய, சோழ நாடுகளைத் தனித் தனியேயும் குறித்துள்ளனர், வான்மீகத்திலும் பாரதத்திலும் இந்நாடுகள் அவற்றின் இயல்போடும் சிறப்போடும் குறிக்கப்பெற்றுள்ளமையை யாவரும் அறிவர். எனவே தமிழகம் முழுமையையும் சுட்ட அவர்கள் வழங்கிய பெயர் திராவிடம் என்பதாகும்.

இனி மூவேந்தர்க்குரியதாகிய இத் தென்னகத்தை வடமொழியாளர் மூவருக்குரிய நிலப்பகுதி என்னும் பொருள் அமையத் திராவிடம் என்று வழங்கினமையையும் இந்தத் திராவிடம் என்பதன் மொழிபெயர்ப்பே தொல்காப்பியச் செய்யுளியலுள் வரும் மூவர்வரைப்பு என்னும் தொகைச்சொல்லாகும் என்பதையும் இனிக் காண்போம்.

தென்மொழியோடு வடமொழிப் புலமையும் சான்றவர் தொல்காப்பியர் என்பதை "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்" என்னும் பனம்பாரனார் கூற்றால் அறியலாம். தொல்

காப்பியர் தம் வடமொழிப் புலமையை தமது நூலுள் தெளி வாகவும் குறிப்பாகவும், நுட்பமாகவும் ஆங்காங்கே புலப் படுத்துவதோடு, தமிழ்மொழி வழக்கினையும் வடமொழி வழக் கினையும் " அகத்தெழு வளியிசை அரில்தபநாடி அளபிற்கோடல் அந்தணர் மறைத்தே அஃதிவண் நுவலாது எழுந்து புறத் திசைக்கும் மெய்தெரிவளியிசை அளபுநுவன்றிசினே " என வெளிப்படையாகவும். ' ஒருவினையொடுச் சொல் உயர்பின் வழித்தே '' எனக் குறிப்பாகவும் சுட்டி வேறுபடுத்தியும், இரு மொழிக்கும் பொதுவான மரபுகளை '' வேற்றுமை தாமே ஏழென மொழிப ''விளிகொள்வதன் கண் விளியோடெட்டே'' ''இரண் டாகுவதே ஐயெனப்பெயரிய '' '' மூன்றுகுவதே ஒடுவெனப் பெயரிய'' எனத் தெளிவுபடுத்தியும், வடமொழி வழக்கினை இம் முறையில் மேற்கொள்ள வேண்டுமென்பதை'' மூன்று தலையிட்ட முப்பஃது இரண்டு தலையிட்ட முதலாகிருபது, ஐயம்பல் என வரூஉமிறுதி '' என அமைத்தும் காட்டுவார். அன்றியும் தமிழ் மரபாகத் திகழ்வதனை வடமொழியாளர் இவ்வாறு அமைத்துக் கொண்டுள்ளனர் என்பதை நாம் தெளியும் வண்ணம் அவர் கள் மொழிபெயர்த்துக்கொண்டமை தோன்றுமாறும் சில வற்றை அமைத்துக் காட்டுவார் எடுத்துக்காட்டாக.

' அகரமுதல் னகர இறுவாய் ' என்றுற்போல் வனவற்றை வடமொழியாளர் 'அன' எனப் பிரத்தியாகாரம் செய்வார்எனத் தோன்றுமாறும்

மூக்கின் வளியிசையாப்புறத்தோன்றும் என்பதனை ' அநு நாசிகம் ' எனவும், தத்தம் பொருள்வயின் தம்மோடு சிவணல் ஒப்பில் வழியாற் பிறிது பொருள் சுட்டல் என்பனவற்றை முறையே ' விடாத லக்கணை, விட்டலக்கணை ' எனவும் மொழி பெர்ப்பார் எனத் தோன்றுமாறும் கூறியுள்ளமை காணலாம்.

மேலும், தமிழுக்கே உரிய மரபுகளையும் பொருள்களையும் வடமொழியாளர் மொழி பெயர்த்துக் கொண்ட பின்னர் அவற் றிற்குரியவற்றை தமிழ்மொழிக்குரிய மரபுச் சொற்களால் கூறு மல் அவ்வடமொழிச் சொற்களையே மொழிபெயர்த்துக் கூறு தலும் தொல்காப்பியரின் இயல்பாகும். இதனைத் தமிழுக்கே உரிய ஐந்திணை ஒழுக்கமாகிய களவொழுக்கத்தை வடமொழி யாளர் கந்தருவ (வழக்கம்) மணம் என்னும் பிரிவில் அடக்கிக் கூறலாம் எனக் கருதி விளக்க வந்த தொல்காப்பியர், களவாவது கந்தருவமணத்தை ஒக்கும் என உரையாமல் கந்தர்வ மணம் என்னும் வடசொல்லைத் '' துணையமைநல்யாழ்த் துணைமை

யோர் இயல்பே" என மொழி பெயர்த்துக் கூறுவதனுல் அறியலாம். இவ்வாறு இவர் கூறுவதற்குக் காரணம் வடமொழியை நன்குணர்ந்தவர்கள் தமிழ் மொழியின் சிறப்பையும் மரபையும் தெளிவாக உணருமுகத்தான் தொல்காப்பியத்தை இவர் இயற்றினராதலின் என்க அதனுற்ருன் வடமொழியாளர் அறிந்திருக்கும் கருத்துக்கள் மூலமாகவே தமிழ் மரபினை ஆங்காங்கே விளக்கிச் செல்வாராயினுர் என்க. இம் முறையை அவர் நூல் முழுதும் காணலாம். எனவே அவர்கள் தமிழகத்தைத் திராவிடம் என்னும் சொல்லால் சுட்டி உணர்ந்திருந்தாராதலின் அந்தத் திராவிடம் என்னும்சொல்லையே மூவர் வரைப்பு என மொழி பெயர்த்துணர்த்துவராயினர். இதனை தமிழ் மொழிக்கே உரியயாப்பின் வகையை உணர்த்தவந்தவர்

பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொல்லோ டவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பெயர் எல்லை யகத்தவர் வழங்கும்
யாப்பின் வழியது என்மனுர் புலவர் (தொல்—செய் 78)

என விளங்கக் கூறியுள்ளமையால் அறியலாம்.

இந்நூற்பாவை வழி நூல் வாய்பாடாகச் செய்துள்ளமை இதனை நன்கு வலியுறுத்தும். மூவர் வரைப்பு என்பதனைத்தான் வடவர்கள் திராவிடம் என மொழி பெயர்த்துக் கொண்டுள்ளனர் என்பதைத் தமிழர்கள் இனிதுணருமாறு மூவர் யாரோ எனஐயுருவண்ணம் வண்புகழ்வோ மூவர்(மூவேந்தர்)என்றும். வரைப்பென்பது வாளா எல்லை எனும் பொருளில் நிற்கவில்லை சோர பாண்டிய சோழ நாடுகளையே குறிக்கும் என்பதனை உணருமாறு தண்பொழில் வரைப்பு என்றும் அடைகொடுத்துக் கூறியுள்ளார் என்பதையும் நன்குணரலாம் மேலும் இவர் தம் நூலில் யாண்டும் மூவேந்தரகத்தைத் தமிழகம் என்னும்சொல்லால் சுட்டியுணர்த்தாமையும். "செந்தமிழ் நிலத்துவழக்கொடு சிவணி" என்றும் 'செந்தமிழ் சேர்ந்தபன்னிரு நிலத்தும்' என்றும் கூறிய இடங்களில் செந்தமிழ் நிலம் என்பது பாண்டிய நாட்டையே வரைந்து உணர்த்துகின்றமையும் நோக்குக. செந்தமிழ் நிலம், கொடுந் தமிழ் நிலம் (திசை மொழி நிலம்) இவை இரண்டும் சேர்ந்கதே தமிழகம் ஆதலின் "வடவேங்கடம் தென்குமரியாயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்" என்றும் "செந்தமிழியற்கை சிவணிய நிலத் தொடுமுத்து நூல்கண்டு" எனவும் பனம்பாரனுர் விளங்க உரைத்துள்ளமையாலும் உணரலாம்.

எனவே தமிழகம் மூவேந்தர்க்குரியதாய் மூவரால் புகழ் கமழ ஆளப்பெற்ற காலை வடமொழியில் ஸ்மிருதிகளும் காவியங்களும் செய்யப்பெற்றனவாதலின் அவ் ஆசிரியர்கள் தமிழகத்தை மூவர்தேசம், மூவரகம், மூவரிடம் என்னும் பொருளமைய "**திராவிடம்**" என மொழி பெயர்த்துத் தத்தம் நூல்களில் ஆண்டனர் என்பதும் அம் முறையால் திராவிடத்தில் வாழ்ந்தவர்களைத் திராவிடர் என்றும் அவர் தம் மொழியை திராவிடம் என்றும் சுட்டி வழங்கினர் என்பது தெளிவாகும்.

இனி திராவிடம் என்பதனுள் திரா (த்ரி) என்பது மூன்று என்னும் எண்ணுப் பொருள்பட நிற்கும் வடசொல் என்பது ஒக்கும். இடம் என்பது தூய தமிழ்ச் சொல்லன்றோ அதனைத் தலம். லோகம் என்றாற் போல வடசொல்லாலன்றோ மொழி பெயர்த்திருத்தல் வேண்டும். ஒன்றை மொழிபெயர்த்து மற்றொன்றை அப்படியே கொண்டு வழங்கினர் எனல் பொருந்துமோ? எனின் நவமணி—சத்தநூல், சடாமுடி சதுர்மறை சோகப்பர். அதிநுட்பம், என்றாற்போல இருமொழியும் சேர்ந்து நிற்கும் வழக்குண்மையின் பொருந்தும் எனக் கூறலாமாயினும், ஈண்டு நிலம் அல்லது தேசம். அகம் என்னும் பொருள் தந்து நிற்கும் 'இடம்' என்னும் இச்சொல் இயல்பான சொல்லன்று இஃது 'இளம்' என்ற சொல்லின் திரிபாகும் என்பதையும் இளம் என்பது (ஈளம்) ஈழம் என்பதன் திரிபென்பதையும் ஈழம் என்பது ஏழகம் என்பதன் திரிபென்பதையும் பின்னர்க் காண்போம் ஆதலின் திரா + ஈளம் = திராவிளம் என இணைந்து பின்னர் சூளாமணி—சூடாமணி என்றாற்போல ளகர டகரம் போலி வகையால் திரிபுற்றுத் திராவிடம் என நின்ற தென்க. இதுவே பிராகிருதத்தில் திரமிளம். திரமிடம் எனவும் வழங்கும் என்க

இனி ஒரு சாரார் ஆலங்குடி. ஆர்க்காடு. மாவூர், முல்லையூர், நெல்லூர், என்றாற்போல இத்தென்னகத்தில் மிகப் பழங்காலத்தில் தமிழ் என்னும் பெயருடைய பூண்டோ. செடி, கொடிகளோ மரங்களோ மண்டி வளர்ந்திருக்க வேண்டும் அம் முறையால் தமிழகப் எனப் பெயர் அமைந்திருக்கலாமென்றும் அன்றி ஆவூர். நாகப்பட்டினம். ஆனைமங்கலம், எருமையூர் என்றாற்போல விலங்குகளோ பிற உயிரினங்களோ தமிழ் என்னும் பெயருடையதாய் நிறைந்திருக்கலாம் அவ்வகையால் தமிழகம் என்று பெயர் அமைந்திருக்கலாம் என்றும் கருதுகின்றனர். இவர்கள் இவ்வாறு கற்பனை செய்வதற்கு மூலம். மறைந்த குமரிக் கண்டத்தைப்பற்றி ஆராய்ந்துணர்த்திய அறிஞர்கள்

அங்கு 'லெமூர்' என்னும் உயிரினங்கள் பல்கி வாழ்ந்திருந்தன எனக் கண்டு அவ்வடிப்படையில் அதற்கு லெமூரியாக் கண்டம் எனப் பெயரிட்டழைக்கலாம் எனக் கருதி அவ்வாறே வழங்கி வருகின்றமையே யாகலாம்.

இனி ஒரு சாரார்; கலையுள்ளம் சான்ற அறிஞர்கள் கவிதைகளுக்கு நயங் காண்பது போலச் சில பெயர்களுக்கு நயங் கண்டுரைக்க, அவற்றை அணி நயஞ்சான்ற கற்பனை எனக் கொள்ளாமல் உண்மை எனக்கொண்டு மயங்கி அம்முறையில் ஆராயத் தலைப்பட்டனர் எடுத்துக்காட்டாக. பரதம் என்னும் நூல் ஆடற்கலையின் இலக்கணம் முதலியவற்றை உணர்த்த பரதர் என்னும் ஆசிரியராற் செய்யப்பெற்றதாகும் ஆக்கியோன் பெயரால் அமைந்திருக்கும் இந்நூற் பெயரில் உள்ள எழுத்துக்களைப் ப—ர—த எனப் பிரித்து ப பாவம் (வினையம்) ர. இராகம் த—தாளம் ஆகவே பாவராகதாளங்களை உணர்த்தும் நூல் பரதநூல் என நயங் கூறினர். இவ்வாறு பல உள. இக்காலத்தும் நாடொறும் புதிய செய்திகளை (கருத்துக்களை)த் தாங்கி வரும் ஏடுகள் என்னும் பொருள்பட நிற்கும் News. என்னும் ஆங்கிலச் சொல்லை. N வடக்கையும் E கிழக்கையும் W மேற்கையும் S தெற்கையும் உணர்த்தும் எனவே நாற்றிசைக் கருத்துக்களையும் தாங்கி வருதலால் அப்பெயர் பெற்றதென்றும் அணிநயம் படக் கூறுவர். இவ்வாறே இங்கிலாந்தில் வாழும் இங்கிலீசுக்காரர் மொழியாகிய இங்கிலீசு அவ் ஆங்கிலேயரின் திறனாலும் ஆட்சியாலும் ஐரோப்பிய நாடுகளிலேயும் உலகில் மற்றும் பல இடங்களிலேயும் பரவிச் செழித்ததாகலின் பிற ஐரோப்பிய மொழிகளுள் சிலவற்றையும் பழைய மொழிகளாகிய கிரீக்கு இலத்தின் மொழிச் சொற்கள் பலவற்றையும் மேற்கொண்டு வளம் பெற்றுள்ளமை கருதி நயமாக இங்கிலாந்து (E) நார்வே (N) செருமணி (G) (அல்லது கிரீக்கு) லத்தீன் (L) (அல்லது லிதுவேணிய) ஐரிசு (I) ஸ்காட்லாந்து (அல்லது ஸ்வீடன்) (S) ஹாலந்து (H) என்னும் ஏழு நாடுகளில் வழங்கும் மொழிகளின் கூட்டம் அல்லது ஏழு மொழிகளைத் தன்னுள் அடக்கி நிற்பது ஆதலின் ENGLISH எனப் பெயர் அமைந்துள்ளது எனக் கல்விக்கலை அறிஞர்கள் அணி நயத்தோடு கூறுவதை உண்மை எனக்கொண்டு 'தமிழ் என்பதும் ஒரு சொல் போலக் காணப்படினும் த—மி—மு அல்லது ளு என்னும் மூன்று எழுத்துக்களும் ஒன்றேடொன்று தொடர்புடைய வெவ்வேறு மூன்று நாட்டின் மொழிகளைக் குறிக்கும் குறியீட்டெழுத்துக்கள் அவை எவ்வெம் மொழிகளைக் குறிக்கின்றன என்பது இப்பொழுது விளங்கவில்லை எனினும் அவற்றின் கூட்டமே தமிளு அல்லது தமிழ் என நிற்கின்றது என விந்தையான கற்பனை செய்வர்.

(தொடரும்)